
# தொண்டன்

ஆசிரியர் :- அந்தனிஜான் அழகரசன், M. A., Ph. D.

தொலைக்காட்சித் தாரகை



வானொலிச் சிங்கம்

பேராயர் புல்டன் சீன்.

தேனீ – 12 ❋ மார்ச் – 1980 ❋ தேனடை – 3 ❋ விலை – 1·00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ... ...


| | | | |
|---|---|---|---|
| 1. | அழகரசனின் அருளோவியம் | — அழகரசன் | — 1 |
| 2. | போர்வைகள் விலகினுல் தெரிவது என்ன? | — யாழ்—பெலிக்ஸ் | — 2 |
| 3. | விவிலியம் கூறும் காதல் கலியாணம் | — அழகரசன் | — 3 |
| 4. | காப்பி அடியுங்கள் | — கிறிஸ்ரோறெக்ஸ் | 5 |
| 5. | பேராயர் புல்டன் சீன் பெருந்தகை | — சீன் விசிறி | — 6 |
| 6. | இன்றைய இளைஞருக்கு தோமாஸ் அக்குவீனுசின் தத்துவங்கள் ஒரு வழிகாட்டி | — 2ம் அருள் சின். | — 9 |
| 7. | பாக்கியம் பாக்கியவதியானுள் | — முகில்வாணன் | — 11 |
| 8. | சிலுவையும் வேதனையும் | — இரத்தினராஜா | — 13 |
| 9. | குழந்தையும் அதன் எதிர்காலமும் | — காலில் கிப்ருன் | — 14 |
| 10. | கிறிஸ்தவ குடும்பம் | — தேவநேசன் | — 15 |
| 11. | பிறக்கவேண்டும் மறுமலர்ச்சி | — கல்வியூரான் | — 16 |
| 12. | அகல் விளக்குகளும் உலகப் பேரொலியும் | — செல்வி பெட்சி | — 17 |
| 13. | புனித சின்னப்பரோடு | — இரா.இருதயமலர் | — 18 |
| 14. | புனித அந்தோனியாரின் அறிவுரை | | — 19 |
| 15. | செய்தி வட்டம் | — | — 20 |


" சட்டம் மக்களுக்குத் தென்றலாக இருக்கவேண்டுமே ஒழியத் தீயாக மாறிவிடக்கூடாது. அப்படித் தீயாக மாறினுல் மக்களின் கண்ணீர் கடலாக மாறிவிடும். காட்டுத் தீ கடலுடன் போட்டியிட்டு வென்றதாகச் சரித்திரச் சான்றுகளில்லே."

— **ம. லில்லி ராஜாமணி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகரசனின் அருளோவியம்

என் அன்புக்கினியவனே !

''தை - மாசி''த் தொண்டனைப் பார்த்து நீ மகிழ்ந்தாய் எனப் பல மடல்கள் நீ எனக்கு எழுதியிருந்தாய். தொண்டன் நூல் வடிவில் வருவதால் அதனை நீ பத்திரமாக வீட்டில் வைத்துப் பேணலாம் எனக் கூறியிருந்தாய். உன் கருத்துத்தான் என் குறிக்கோளுமாகும்.

இத்திங்களின் கருத்தோவியமாக **''தலையீட்டால் வரும் தலையிடி''** பற்றி உன்னோடு கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள விரும்புகின்றேன்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'' *(கு. 517)* என்பது வான்புகழ் வள்ளுவன் வாக்கு. இந்தத்தொழிலை, இக்கருவியால், இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்தபிறகு அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்கவேண்டும் என்பது இக்குறளுக்கு விளக்கம்.

ஒவ்வொருவருடைய தனித் திறமைகளையும் அறிந்து அதற்கேற்ப பணியை, பதவியை, பொறுப்பை இளைஞர்களிடமோ, பெரியவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும். சமைக்கத் தெரிந்தவனிடம் சமையலை விட்டுவிடவேண்டும். சலவை செய்யத் தெரிந்தவனிடம் சட்டையைக் கொடுத்துவிடவேண்டும். சலவை செய்யத் தெரிந்தவனிடம் சமையலைக் கொடுத்தால் சட்டை வரும் - சாப்பாடு வராது. கணக்குத் தெரிந்தவனிடம் கணக்குப்பாடம் கேட்கவேண்டும். கண் வைத்தியம் தெரிந்தவனிடம் கண்ணைக் காட்டவேண்டும். அவரவர் தன்மை அறிந்து, இயல்பை உணர்ந்து, திறமையை ஆய்ந்துஒரு பொறுப்பை அவரிடம் ஒப்படைக்கவேண்டும்.

இந்தப் பொறுப்பை இவர்தான் சிறப்பாகச் செய்வார் என அலசி ஆராய்ந்து அதை அவரிடம் ஒப்படைத்தபின் அவர் வேலையில் தலையிடக் கூடாது — நோண்டிக்கொண்டிருக்கக்கூடாது (Do not poke your nose). செய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாற்ற அவருக்குச் சுதந்திரம் அளிக்கவேண்டும். அப்படி அதிகம் அவர் வேலையில் தலையிட்டால் – "ஏனய்யா இந்த வேலையை நீ எனக்குத் தந்தாய்? நீயே இந்த வேலையைச் செய்திருக்கலாமே" என்று கூறிவிட்டு ஆள் போய் விடுவான். இத்தலையீட்டால் ஆள்பலம் குன்றும். செய்யவேண்டிய வேலை குன்றுபோல உயரும். இதனை உணர்ந்த வள்ளுவப் பெருந்தகையார் எவ்வளவு அழகாக "அதனை அவன்கண் ''விடல்'' என்று கூறியிருக்கின்றார். ''விடல்'' என்றால் அந்தப் பணியைச் செய்ய அவனுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்துவிட்டு சும்மா இருந்துவிடவேண்டும்.

அன்புக்கினியவனே !

வள்ளுவர் சொன்ன இக்கருத்து உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான கருத்து – எல்லாத் துறைகளுக்கும் ஏற்ற கருத்து – வீட்டு நிர்வாகத்துக்குப் பொருந்தும் கருத்து – கல்விச்சாலைகளுக்குப் பொருந்தும் ஏற்றமிகு கருத்து. ஆப்கானிஸ்தானில் சோவியத் ரூசியா தலையீட்டால் வந்த விளைவுபற்றி நீ செய்தித்தாள்களில் படித்திருப்பாய் அல்லவா? சமயத் துறைகளிலும் சரி, உன் வாழ்க்கையிலும் சரி ஒருவருக்கு ஒரு பொறுப்பு கொடுத்த பின் அதிக அளவு தலையிடாதே. இத்தாரக மந்திரத்தை உன் நெஞ்சம் என்ற மஞ்சத்தில் பதியவைத்து அமைதி வாழ்வு வாழ வாழ்த்தி விடைகூறும்

உன் நெஞ்சுக்கு இனிய அன்பன்,

**அழகரசன்,** M. A., Ph. D.

# போர்வைகள் விலகினால் தெரிவது என்ன?

மனிதன் என்ற போர்வையில் மிருகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு போலி மனிதர்களும், இன்றைய வாழ்வில்,

தியாகம் என்ற போர்வையில் திமிர் பிடித்தோராக,
யோகி என்ற போர்வையில் சுக போகியாக,
தொண்டன் என்ற போர்வையில் துரோகிகளாக,
வள்ளல் என்ற போர்வையில் அள்ளி எடுப்பவர்களாக,
அன்பு என்ற போர்வையில் ஆசையுள்ளவர்களாக,
ஆசான் என்ற போர்வையில் அடக்குபவர்களாக,
வீரன் என்ற போர்வையில் விரட்டுபவர்களாக,
பெண்மை என்ற போர்வையில் பேயாக,
நடிகன் என்ற போர்வையில் நஞ்சனாக

இயங்கும் மனிதர்களின் மட்டங்கள் பட்டம் என்ற போர்வைக்குள்ளும், இவர்களுடைய திட்டங்கள் சட்டம் என்ற போர்வைக்குள்ளும் இருப்பது அவசியம்தானா?

**யாழ் - பெலிக்ஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியம் கூறும் காதல் கலியாணம்

அருள்திரு. அந்தனிஜான் அழகரசன்
(எம். ஏ., பி. எச். டி.)

## கிணற்றடியில் காதல்:

அது வயலும் வயலைச் சார்ந்த இடம். நெல்மணிகளும், நீர்நிலைகளும் உள்ள இடம். மருத நிலம் என அழைக்கப்படும் இடம். ஆரன் என்பது அந்த ஊரின் பெயர். பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று பல அழகிய வயல்கள், வரப்புக்கள் அவ்வூரை அரண் செய்தன. கிணறுகளும், நீர்ச்சுனைகளும் அவ்வூரை இன்னும் செழிப்படையச் செய்தன. கிணறுகள் பல இருந்தாலும் ஒரு கிணறுக்கு மட்டும் கிராக்கி அதிகம். ஆட்டு மந்தைகள் எல்லாம் இக்கிணற்றில் இருந்தே தண்ணீர் குடிக்கும் வாய்ப்பைப் பெறும். மேய்ப்பர்களும், ஆயர்களும் தங்கள் ஆட்டுக்கிடையை இக்கிணற்றுக்கே ஓட்டிவருவது வழக்கம்.

ஒருநாள் மாலை ஆடுகள் இக்கிணற்றிலிருந்து நீர் குடித்துக்கொண்டிருக்கும் வேளையில் அவ்வழியே ஒரு கட்டிளங்காளை வந்தான். அவன் பெயர் யாக்கோப்பு. அவன் ஏறுபோல் பீடுநடை போட்டு அங்கு வந்தான். அவன் சிம்மக்குரலிலே கிணற்றடியிலே உள்ள மேய்ப்பர்களைப் பார்த்து ''உடன் பிறப்புக்களே! நீங்கள் எந்த ஊரார்'' என வினவினான். அதற்கு அவர்கள் ''நாங்கள் ஆரான் ஊரார்'' என விடை பகர்ந்தனர். இன்னும் ஓர் கேள்வியைத் தொடுத்தான் அந்த அழகன். ''நாக்கோரின் மகனான லாபானை அறிவீர்களா?'' எனக் கேட்டான். ''ஆம்! ஆம்! அறிவோம்'' என்றனர். ''அவர் நலமுடன் இருக்கின்றாரா'' என மீண்டும் கேள்விக் கணைகளைத் தொடுத்தான் அந்தத்திண்தோள் படைத்த வீரன் ''ஆம், அவர் நலமாய்த் தான் இருக்கின்றார்''.

## மங்கிய மாலை வேளையில் மயக்கும் மங்கை:

காற்றிலே இளம் பூங்கொடி ஒன்று அசைந்தாடுவது போன்று மங்கை ஒருத்தி கிணற்றைநோக்கி வந்துகொண்டிருந்தாள். நிலாவை ஒத்த முகத்தாள், நூலைவிட சிறிய இடையுடையாள், மானின் பார்வையை விஞ்சும் மருண்ட பார்வையுடையாள். தெய்வப் பெண்ணோ! மயிலோ? கனமான குழை அணிந்த மனிதப் பெண்ணோ என்று கண்டவர் திண்டாடும் அழகுப் பாவை அங்கு வந்துகொண்டிருந்தாள். இந்த அழகுப் பூங்கொடி அன்னநடை போட்டு வருவதைக் கண்டதும் கிணற்றருகே இருந்த ஆயர்கள் ''அதோ! லாபானின் மகள் வந்துகொண்டிருக்கின்றாள்; அவள் பெயர் இராக்கேல்'' என்று அவள் வருமுன்னரே ஆயர்கள் யாக்கோப்புக்கு அறிமுகம் செய்துவைத்தனர். யாக்கோப்பு அவளைப் பார்த்தான். அவளும் அவனை நோக்கினாள். அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள். இருவரும் இதயம் மாறிப் புக்கினர். நான்கு

> ''தன்னால் கட்சிக்கு என்ன லாபம் வரும் என்று நினைப்பவன் கட்சிக்கு இரத்தநாளம் போன்றவன். கட்சியால் தனக்கு என்ன லாபம் வரும் என்று நினைக்கிறவன் புற்றுநோய் போன்றவன்''
>
> — கலைஞர்
> மு. கருணாநிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மொழிகள்

1. "வீடு கட்டுவது கடினம்; கட்டின வீட்டில் பிழை கண்டு பிடிப்பது சுலபம்".

2. "நல்ல பல நூல்களைப் படிக்காதவர்களும், நல்ல உரைகளைக் கேட்காதவர்களும், வாழ்ந்தாலும் ஒன்றுதான், இறந்தாலும் ஒன்றுதான்."

3. "முக்கியமானவனாய் இருப்பதைவிட மனிதாபிமானவனாய் இருப்பது மேல்"

4. "சோதனைகள்தான் வாழ்வுக்குச் சுவை அளிப்பது"

கண்களும் மின்னல் வேகத்தில் பேசின. இரு உள்ளங்கள் இதயம் என்ற திரைச் சீலையில் ஓவியங்களைத் தீட்டிப்பார்த்து இன்புற்றன. மங்கை மந்தைகளுடன் கிணற்றை நெருங்கிக்கொண்டிருந்தாள்.

நாடகத்தில், காவியத்தில் காதல் என்றால் ஆமாம் என்கின்றனர் மக்கள். ஆனால், வீடகத்தே, கிணற்றோரத்தே காதல் என்றால் உறுமுகின்றனர் மக்கள் என்பார் புதுவைதந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். விவிலியத்தில் அன்று ஆரான் ஊரில் கிணற்றோரத்தே ஒரு காதல் கதை வடிவெடுத்துக் கொண்டிருந்தது.

இராக்கேல் என்ற எழிலரசி கிணற்றடிக்கு மந்தையோடு வருவதைக்கண்ட யாக்கோப்பு ஆடுகளுக்குத் தண்ணீர் கொடுக்கத் தயாராய் இருந்தான். எல்லா ஆடுகளும் ஒன்று சேர்ந்தபின் கிணற்று வாயினின்று கல்லைப் புரட்டி தண்ணீர் காட்டுவோம் என்றனர் கிணற்றோரத்தே இருந்த ஆயர்கள். இப்படி யாக்கோப்பு ஆயர்களோடு உரையாடிக்கொண்டிருக்கையில் இராக்கேல் தன் தந்தையின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள். அவளே மந்தையை மேய்த்துவந்தாள். யாக்கோப்பு கிணற்றை மூடியிருந்த கல்லைப் புரட்டி மந்தைக்குத் தண்ணீர் காட்டினான். யாக்கோப்பு மந்தைக்குத் தண்ணீர் குடிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கும் வேளையிலே - இராக்கேல் குறுநகை புரிந்துகொண்டு அவன் அழகைப் பருகிக் கொண்டிருந்தாள். யாக்கோப்பு அவளை நோக்கினபோது அவள் நிலத்தை நோக்கினாள். அவன் அவளை நோக்காதபோது அவள் அவனை நோக்கி மெல்ல தனக்குள் மகிழ்ந்தாள். காதல் வாழ்க்கையின் தொடக்கத்தில், பெண் ஓர் ஊமை. தன் காதலை அவள் அடைந்துவிட்டபிறகு அவள் ஒரு பிரசங்கி. யாக்கோப்பு இராக்கேலுக்குத் தன் உறவு முறைகளை விளக்கினான். தான் அவள் தந்தைக்குச் சகோதரனும், இரெபேக்காளுடைய மகனுமென்று அவளுக்குத் தெரிவித்தான். அவள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பேசாமடந்தையானாள். அப்போது அவள் எதிர்பாராத முத்தம் ஒன்றை யாக்கோப்பு அவளுக்குக் கொடுத்தான். "பின் இராக்கேலை முத்தம் செய்து உரத்த சத்தமிட்டு அழுதான்" (ஆதி ஆகமம் 29:11-12).

### காதலின் பரிசு — இரத்தம், தியாகம், உழைப்பு:

எதிர்பாராத முத்தம் பெற்ற இராக்கேல் நாணத்துடன் வீட்டிற்கு ஓடினாள். அங்கு தன் தந்தையிடம் யாக்கோப்பின் வருகைபற்றிச் சொன்னாள். லாபான் அவனை வரவேற்று "நீ என் எலும்பும் மாமிசமுமானவன் அன்றோ" என்றான். லாபானுக்கு இரண்டு புதல்விகள் இருந்தனர். மூத்தவளுடைய பெயர் லீயாள். இவள் பீளைக்கண் உடையவள். இளையவள் பெயர் இராக்கேல். இவள் வடிவழகும், முக எழிலும் உள்ளவள். யாக்கோப்பு இராக்கேல்மேல் மையல் கொண்டான். அவளை எப்படியாவது கரம் தொட்டு மணம்செய்ய விரும்பினான். காதல் பாதை கரடுமுரடானது. இரத்தம், வியர்வை, தியாகம் நிறைந்தது. தந்தை லாபான் எழிலரசியாகிய இராக்கேலை யாக்கோப்புக்குச் சும்மா கொடுக்க விரும்பவில்லை. ஓராண்டு அல்ல, ஈராண்டல்ல ஏழு ஆண்டுகள் தனக்கு வேலை செய்துதரும்படி கேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். யாக்கோப்பு ''உம்முடைய இளைய புதல்விக்காக நான் உம்மிடம் ஏழாண்டுகள் வேலை செய்கிறேன்'' என ஒத்துக்கொண்டான். யாக்கோப்பு இராக்கேல்மேல் கொண்ட காதல் தூய காதலாகும். அவளை அடைவதற்காக யாக்கோப்பு ஏழாண்டுகள் கடின வேலை செய்துவந்தான். உண்மைக் காதல் பல இன்னல்களைத் தாங்கும். காடுகளையும், மலைகளையும், கடல்களையும் கடக்கும். ''மங்கையர் தம் கடைக்கண் பார்வையைக் காட்டிவிட்டால் ஆடவர்க்கு மாமலையும் சிறு கடுகாம்'' என்பான், புரட்சிக் கவிஞன் பாரதிதாசன். யாக்கோப்பு இராக்கேல்மேல் கொண்ட தீராக் காதலினல் அவ்வேழாண்டுகளும் ஒரு சிறு பொழுது போல் போனதாம் என விவிலிய ஆசிரியர் இவ்வாறு கூறுவார். ''அப்படியே யாக்கோப்பு ஏழாண்டுகள் இராக்கேலை முன்னிட்டு வேலை செய்துவந்தான். ஆனல், அவள்மீது அவன் வைத்திருந்த அன்பின் மிகுதியால் அவ்வேழாண்டுகள் அவனுக்குக் கொஞ்ச நாளாகவே தோன்றின'' (ஆதி ஆகமம் 29 : 20-21).

## வஞ்சிக்கும் மாமனர் :

குறித்த ஏழாண்டுகள் முடிந்ததும் யாக்கோப்பு இராக்கேலை மணம் செய்து தரும்படி கேட்டான். அதற்கு வஞ்சிக்கும் மாமனர் லாபான் ''மூத்தவள் இருக்க இளைய பெண்ணைக் கொடுப்பது இவ்விடத்தில் வழக்கமில்லையே'' என்றான். ''இன்னும் ஏழாண்டுகள் என்னிடம் வேலை செய்தால் இராக்கேலை உனக்குக் கொடுப்பேன்'' என்றான். இராக்கேல்மேல் கொண்ட காதலால் அவ்வாறே செய்ய இசைந்தான்.

## காதல் நிறைவேறல் :

பலநாள் இரத்த வியர்வை சிந்தி உழைத்தபின் தன் இலட்சியப் பெண் இராக்கேலை மணமேடையில் சந்தித்தான். காதல் கனிந்தது - மலர்மாலை மாற்றினர்கள். இருவரும் ஒருயிரும் ஈருடலுமாயினர். யாக்கோப்பு — இராக்கேல் இருவரும் காதல் கலியாணம் செய்தனர்.

(விவிலியம், ஆதி ஆகமம், 29ம் அதிகாரத்தை மையமாக வைத்து கட்டுரை எழுதப்பட்டது.)

# காப்பி அடியுங்கள்!

ஓர் ஊரில் நல்லான் என்பவன் இருந்தான். அவன் இன்பம் என்பவளை மணந்தான். அவர்களுக்கு முறையே அன்பு, ஒற்றுமை, சமாதானம் என்னும் மக்கள் பிறந்தார்கள். இன்னெரு ஊரில் பொல்லான் என்பவன் இருந்தான். துன்பம் அவனுக்குத் துணைவியானள். பிறகு பொறாமை, வேற்றுமை, சண்டை என்னும் மக்கள்பிறந்தனர். பிள்ளைகள் எல்லோரும் கல்வி கற்கச் சென்றனர். நல்லாயன் என்பவர் அவர்களுக்குக் கல்வி கற்க உதவினர். அன்பு, ஒற்றுமை, சமாதானம் என்னும் சகோதரர்கள் நன்ருகப் படித்தனர். நல்ல பிள்ளைகளாக இருந்தனர். எல்லோரும் அவர்களை நேசித்தனர். பொறாமை, வேற்றுமை, சண்டை என்னும் சகோதரர்கள் நன்ருகப் படிப்பதில்லை. பொல்லாத போக்கிரிகள் என்ற பட்டம் வாங்கினர். எல்லோரும் அவர்களை வெறுத்தனர்.

நல்லாயன் இவர்களைப் பக்குவமாகத் திருத்த விரும்பினர். எனவே, இதுவரை எந்த ஆசிரியரும் கையாளாத ஓர் உபாயத்தைக் கையாண்டார். அவர் பொறாமை, வேற்றுமை, சண்டை என்னும் சகோதர மாணவர்களை அழைத்து, ''நீங்கள் அன்பு, ஒற்றுமை, சமாதானம் என்னும் சகோதர மாணவர்களைப் பார்த்து அப்படியே காப்பி அடியுங்கள்'' என்ருர்.

அவ்வளவுதான் !

**மா. கிறிஸ்ரோறெக்ஸ்,**
**சொறிக்கல்முனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சித் தாரகை

# பேராயர் புல்டன் சீன் பெருந்தகை!

— சீன் விசிறி —

இருபதாம் நூற்றூண்டின் ஈடு இணை யற்ற இறைவனின் தொலைக்காட்சியாளர் பேராயர் புல்டன் சீன் பெருந்தகையாகும். வாஞெலிச் சிங்கம், சிந்தனைச் செம்மல், இருபதாம் நூற்ருண்டின் திருமுழுக்கு அருளப்பர் பேராயர் புல்டன் சீன் பெருந்தகை யாகும். பல சிறப்புக்கள் பெற்ற பேராயரின் மறைவு கத்தோலிக்க உலகிற்கு ஒரு பேரிடியாகும் — கிறிஸ்தவ உலகுக்கு ஒரு பேரிழப்பாகும். மறைபரப்புச் சபையின் ஒளி விளக்கொன்று அணைந்துவிட்டது; ஏழை மக்களுக்கு நிழல் கொடுத்துவந்த ஆலை மரம் ஒன்று சாய்ந்துவிட்டது. பல உள்ளங்கள் துடிக்கின்றன; கோடி இதயங்கள் தவிக்கின்றன; கண்கள் குளமாகின்றன; கிறிஸ்தவ உலகமே கண்ணீர் வடிக்கின்றது.

பேராயர் புல்டன் சீன் அமெரிக்காவில் உள்ள எல்பசோ என்ற ஊரில் இரும்பு வியாபாரியின் ஏழை மகஞகப் பிறந்தார். ''உழைப்பின் வாரா உயர்வுகளுண்டோ'' என்ற பொன்மொழிக்கேற்ப உழைத்து, உழைத்துப் படிப்படியாக உயர்ந்தார். பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்ருர். இறைவனின் நித்திய குருவானுர். இவர் உலகம் கண்ட தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவராவார். ஆயிரத்தி தொளாயிரத்தி முப்பத்திரண்டில் அருட்தந்தை புல்டன் சீஞய் இருந்துகொண்டு டப்லின் நற்கருணை மகாநாட்டில் லட்சோப லட்சம் மக்களின் முன் பேசி எல்லோரையும் பரவசத்தில் ஆழ்த்தினுர். இவரை (Silver tongued sheen) ''வெள்ளி நா சீன்'' என உலகம் பாராட்டியது. இவரது அரிய உரையைக் கேட்டு ஆயிரக்கணக்காஞேர் கிறுஸ்தவ மறையைத் தழுவினர். பல அரசியல் மேதைகளையும், மெய்ப்பொருள் ஞானிகளையும் தன் நாவன்மையால் கிறிஸ்துவைத் தம் வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிருர். சிறப்பாக உலகப்புகழ் பெற்ற ரஷ்ய நாட்டுத் தூதுவராக விளங்கிய கிளேயாபூத் என்பவரைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ப்பதற்கு மூலகாரணமாயிருந்தார். இவரின் அருமை பெருமைகளை அறிந்த பாப்பரசர் நியுயோக் நகரத்தின் கருதிஞல் இஸ்பெல்மனுக்குத் துணையாயராக நியமித்தார்.

ஆயிரத்தி தொளாயிரத்தி ஐம்பதாம் ஆண்டு தொலைக்காட்சிகளில் நடந்த பேச்

### உலகச் செய்திகள்

1. உலகப் புகழ்பெற்ற அன்னை தெரேசாள் உடுக்கும் சேலையின் விலை ஆக 18 ரூபாய்தான்.

2. உலகில் ஆண்டுதோறும் 92 இலட்சம் குழந்தைகள் பசியால் இறக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்கு

### லூர்து நீரும் - பிராந்தியும்

ஒரு மாது லூர்து நகருக்குச் சென்றிருந்தாள். அங்கிருந்து ஒரு போத்தல் பிராந்தியுடன் விமான நிலையம் சென்றுள். விமான நிலையத்தில் அவள் கொண்டு செல்லும் பொருட்களைச் சோதனை செய்தனர். சோதனை செய்வோரின் கண்களுக்கு அந்த - பிராந்திப் புட்டி கண்ணில் பட்டது. எண்ணம்மா அதைப் பார்க்கலாமா? ஆம், தாரராளமாக என்றுள். பரிசோதகர் எண்ணம்மா இது பிராந்தி வாடை அடிக்கிறதே என்றதும், நான் லூர்துநீர் கொண்டு வந்தேன் - அது பிராந்தியாக மாறிவிட்டதே. ஓ! லூர்து மாதாவே என்ன புதுமை செய்துவிட்டாய் என்றுள் அவள்.

— *(சீன் ஆண்டகை பிரசங்கத்திலிருந்து)*

சுப் போட்டிகளில் உலகப்புகழ்பெற்ற ஐக்கிளிசனை முறியடித்து ''தொலைக்காட்சித் தாரகை'' என்ற பட்டத்தையும் பெற்றுர்.

''வாழ்க்கை வாழ்வதற்கே'' (Life is-worth living) என்ற தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சிகளால் இவருக்குக்கிடைத்த ஏழு லட்சம் டொலர் பணத்தின் ஒவ்வொரு பணத்தையும் ஏழை நாடுகளுக்கு அன்பளிப்புச் செய்த கொடைவள்ளல் சீன் ஆண்டகையாகும். இவர் ஒரு நாளில் பதினுறு மணி நேரம் பணிபுரியும் மறைபரப்பாளர் ஆவார். இவர் நூற்றுக்கு மேற்பட்ட உலகச் சிறப்புப் பெற்ற நூல்களைப் படைத்திருக்கின்றுர். இவருடைய ஒவ்வொரு நூலும் பல இலட்சம் பிரதிகளைக் கண்டிருக்கின்றன. அமெரிக்காவிலுள்ள வாசிங்டன் பல்கலைக் கழகத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாக மெய்ப்பொருள் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பதினுறு ஆண்டுகளாக மறைபரப்புத் தேசியத் தலைவராகப் பணியாற்றிச் சிறப் படைந்தார். இவர் ஏழைகளின் ஏந்தல் தன் கையில் ஏதுமிருந்தால் ஏழைகளுக்குக் கொடுப்பதில் அவருக்கு நிகர் அவரே. ஒரு முறை பேராயர் சீன் மறைபரப்புத் தலைவராயிருந்தபொழுது இருபத்தியொரு வயதுத் தாதியொருத்தி நூற்றி முப்பத்தி இரண்டாயிரம் டாலர் பணத்தை அனுப்பினுள். அதை ஏழை நாடுகளுக்குப் பகிர்ந்தளித்தார். இன்னெருமுறை பேராயர் சீன் விமானத்தில் பயணம் செய்தபோது விமானப் பணிப்பெண்ணைச் சந்தித்தார். அவள் அவரிடம் தானெரு கன்னியாஸ்திரியாய் வர விரும்பவில்லையென்றும் ஆனல் ஏழைகளுக்காகப் பணிவிடை செய்ய விரும்புவதாகவும் கூறினுள். பேராயர் சீன் அவளை வியட்னுமிலுள்ள தொழுநோய் மருத்துவ மனைக்குப் பணிவிடை செய்ய அனுப்பினுர். அங்கு அவள் இரண்டாண்டுகள் இலவசமாய்ப் பணிசெய்து அங்குள்ள நோயாளருக்கும், துன்புறுவோருக்கும் வாழ்க்கையில் அழகும், அமைதியும், ஆறுதலும் கொண்டுவந்தாள். அடிக்கடி பேராயர் சீன் இவ்வாறு கூறுவார். ''கடவுள் ஒருசிலருக்கு அழகைக் கொடுக்கின்றுர். ஆனுல் ஒருசிலரே அழகென்னும் தாலந்தைப் பெருகச்செய்து கடவுளுக்கு மகிமை கொடுக்கின்றுர்கள். ஆனுல் இந்த விமானப் பணிப்பெண்ணே துன்பத்தால் உருக்குலைந்தவர்களுக்குத் தன்னை கொடுத்து இறைவனுக்கு இன்பத்தைக் கொண்டு வந்தாள்''.பேராயர் சீன் பலதடவை சிறப்பு மறையுரைகள் ஆற்ற உலகெல்லாம் சென்று வந்தார்.

### உலக அஞ்சலி :-

அமெரிக்காவிலுள்ள செக்கர் கப் டெக்சி நிறுவனம் இவரின் சேவையைப் பாராட்டி ஒரு மோட்டார் வண்டியை அன்பளிப்புச் செய்தது. கில்டன் ஹொட்டல் உரிமையாளர்கள் தங்கள் ஹொட்டல்களுக்கு இவரை அழைத்துக்கௌரவிப்பதில் போட்டி போட்டனர். பல பாப்பரசர்கள் இவரைப் பலவாறு கௌரவித்திருக்கின்றனர்; பல அரசியல் தலைவர்கள் இவருக்கு அஞ்சலி செய்திருக்கின்றனர். அமெரிக்காவின் பல குடியரசுத் தலைவர்கள் இவரின் அறிவுரையைக் கேட்டு நெறி திருந்தியிருக்கின்றனர். எவ்வளவு புகழ் ஏணியில் உயர்ந்து சென்றுலும் பேராயர் சீன் ஆடம்பரமற்ற எளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வே நடத்திவந்தார்கள். இவர் ஒரு கரும்பலகையையும், வெண் கட்டியையும் தொலைக்காட்சியில் பயன்படுத்தி லட்சக் கணக்கான பார்வையாளர்களைத் தன்வசம் கவர்ந்தார். வல்லவனுக்குப் புல்லும் ஆயுத மன்றோ. பலர் அவரின் துன்பத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது அவர் கூறுவார்: ''எச மானை விட ஊழியன் பெரியவனல்லன். யேசு துன்ப துயரத்திற்காளானார். நான் அவரின் ஊழியன். எனவே அவருக்காகத் துன்பப்படுகையிலும் அவரோடு இணைந் திருக்கையிலும் நான் பெருமையடைகின் றேன்'' என்பார். பேராயர் புல்டன் சீன் இதயச் சிகிச்சை பெற்று மருத்துவமனை விட்டு வெளிவரும்பொழுது பத்திரிகை ஆசிரி யர்கள் அவரைப் பேட்டி கண்டார்கள். அவர் அவர்களுக்குக் கூறிய சொற்கள் சிந் திக்கத்தக்கவை. ''நான் இவ்வுலகில் வாழ்ந் தால் கிறிஸ்து என்னும் கதாநாயகன் என் பேச்சில், என் மூச்சில், வாழ்வில் ஜொலித் துக்கொண்டேயிருப்பார்''. நாற்பது தடவை லூர்து கெபிக்கு யாத்திரையாகச் சென் றிருக்கின்றார். மரியன்னையின் திருநாளில் தான் இறக்கவேண்டுமென ஆசைகொண் டிருந்தார். ஆம், மரியன்னையின் திருநாளை அடுத்தநாள் மார்கழித் திங்கள் ஒன்பதாம் நாள் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத் தொன்பதாம் ஆண்டில் பேராயர் சீன் அவர்கள் மரியன்னையை நோக்கி விண்ணகப் பயணம் சென்று இறைவனடி சேர்ந்தார். சில மனிதர்கள் பிறப்பிலே பெரியவர்கள். இன்னுமொரு சிலர் தம் வாழ்நாளில் பெருமையைத் தேடிக்கொள்கிறார்கள். சில ருக்குப் பெருமை திணிக்கப்படுகிறது. பேராயர் புல்டன் சீன் பிறப்பிலும் தம் வாழ்விலும் பெரியவர். இத்தகைய பெரிய வர் பலருடைய பொறாமைக் கண்களுக்கு இலக்காகினார். இருந்தும் இவர் நினைத்த தைச் செய்யும் கருமவீரனாக விளங்கினார். உலக நோபல் அமைதிப் பரிசு பெறுவதற்கு முற்றிலும் தகுதிவாய்ந்தவர் பேராயர் புல்டன் சீன் பெருந்தகையாகும். அந்தோ! அவர் மறைந்துவிட்டார். பேராயர் சீனின் முழு வாழ்க்கைத் தத்துவமும் ''கடவுள் உன்னை நேசிக்கிறார்'' என்பதில் அடங்கும்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்'' என்ற

வள்ளுவன் வாக்குக்கேற்ப சீனின் புகழ் என்றும் நிலைநிற்கும். மக்களை நல்வழிப் படுத்தியவர்கள் வானிலே விண் மீன்களைப் போலவும், நிலாவைப்போலவும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பார்கள். ஆம், சீன் ஒளியாக நின்று என்றும் ஒளிகொடுப்பார் என்பது திண்ணம்.

வாழ்க தொலைக்காட்சித் தாரகை!
வாழ்க வானொலிச் சிங்கம்!!
ஒளிவிடுக மறைபரப்புப் பணியின்
ஒளி விளக்கு பேராயர் சீன்!!!

# நல்வாழ்வால் இறை நடுவோம்!

சொல்லற்கரிய அற நெறியை
சொல்லித் தந்த வள்ளலவன்
நல்லநல்ல நெறி கண்டெந்
நாளும் போற்றிப் பணியாற்றி
மாக்க ளென்னும் வழிமுறையை
மக்களாக மாற்றி நிதம்
கொள்ளும் ஞானம் மிகுந்திடவே
கொணர்வோம் இறையைப் புவிமீதே!

அல்லும் பகலும் வழுவாமல்
அன்புப் பாதையில் வழிநடந்து
புன்செய் மாந்த ருளந்தன்னில்
புனைந்தே இறையி னின்சொல்லை
கள்ளமில்லா சேய் யுள்ளம்
கற்றார் மற்றார் எவ்வெவரும்
காத்து நிதம் வாழ்ந்திடவே
காண்போம் இறையைப் புவிமீதே!

மண்ணில் வாழும் வாழ்நாளில்
மகிழ்வொன் றுென்று உண்டென்றால்
விண்ணி லுண்டே மிகுததனை
விளைந்து நாமும் பருகிடவே
துன்பம் துயர்கள் பொறுமையுடன்
துணிந்து உண்மை நிலைநாட்டி
நன்னிற் கினிய அருள்வாழ்வால்
நடுவோம் இறையைப் புவிமீதே!

கி. ஜெனற்மாலினி,
வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞருக்கு தோமாஸ் அக்குவீனசின் தத்துவங்கள் ஒரு வழிகாட்டி !

**(2ம் அருள் சின்னப்பர் பாப்பரசர்)**

*1979ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 17ம் நாள் உரோமையிலுள்ள ஆஞ்சலிக்கம் பல்கலைக்கழகம் 13ம் சிங்கராயர் பாப்பரசரின் ''நித்திய தந்தை'' சுற்றுமடலின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. இவ்விழாவை அனைத்துலக புனித தோமாஸ் அக்குவீனஸ் கழகத்தார் ஏற்பாடு செய்திருந்தனர். அவ்வமயம் இரண்டாம் அருள் சின்னப்பர் பாப்பரசர் தாம் பயின்ற ஆஞ்சலிக்கம் பல்கலைக்கழகத்தில் பேருரை ஆற்றச் சென்றிருந்தார். அவரின் பேருரையின் தமிழாக்கத்தின் சுருக்கம் :—*

பேராசிரியப் பெருமக்களே! மாணவச் செல்வங்களே! என் நெஞ்சம் இனிய பழைய எண்ணங்களைச் சுமந்து வருகின்றது. என் இளமைக் காலத்தில் நான் பலமுறை நடமாடிய இடம் இதுவன்றோ! புனித தோமாஸ் அக்குவீனசின் படிப்பினைகளை நான் ஆழப் படிப்பதற்கு உறுதுணை செய்த இடம் இதுவன்றோ! புனித தோமாஸ் அக்குவீனசின் மெய்ப்பொருள் இன்றைய கிறிஸ்தவனின் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது, என்றால் மிகையாகாது. இறையியலிலும், மெய்யியலிலும் மறுமலர்ச்சியைக் கொண்டுவந்த வித்தகர் இவராவார். விசுவாசம் காட்டும் உண்மைகளை பகுத்தறிவுமூலம் காட்ட முற்பட்ட விண்ணக முனைவர் இவராகும். சிதறிய உடலின் உறுப்புக்களை ஒருங்கிணைக்கும் மருத்துவர் போன்று சிதறிய உண்மைகளை ஒன்று சேர்த்துத் தொகுத்து, வகுத்து, விரித்துத் தந்த சிந்தனைச் சிற்பி இவராகும். பகுத்தறிவு, விசுவாசம் இரண்டும் வெவ்வேறான முரண்பாட்டுக்கொள்கைகள் அல்ல. ஆனால் இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்லும் கோட்பாடுகள் என்று காட்டிய கலங்கரை விளக்கம் இவராகும். அவரின் சீரிய அறிவும் தெளிவான சிந்தனையும் இன்றைய இளைஞருக்கு மிகமிகத் தேவைப்படுகின்றது. இன்றைய உலகின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் ஆசானாக விளங்குகிறார், தோமஸ் அக்குவீனஸ். இன்றைய இளைஞர்கள் அவரின் நூல்களை நாடிச் செல்வது நல்லது. இவரை விண்ணக முனைவரென்றும், திருமறையின் விற்பன்னர் என்றும், உயர் கல்வியின் பாதுகாவலர் என்றும் அழைக்கப் படுவதற்கு அவரில் விளங்கிய பண்புகள் என்னவென்று சிந்தித்துப் பார்ப்பது சாலச் சிறந்தது. அவரின் வாழ்வில் காணப்பட்ட முதற்பண்பு பணிவாகும். இவர் முழு இதயத்துடனும், முழு மனத்துடனும் இறை வெளிபாட்டிற்குப் பணிந்தார். 1274ம் ஆண்டு பங்குனி மாதம் 7ம் நாள் மரணப் படுக்கையில் கிடந்தபொழுது இறை வெளிப் பாட்டுக்குத் தன் பணிவைப் புதிப்பித்தார். இன்றும் கத்தோலிக்க மெய்ப்பொருள் விற்பன்னர்களும், இறையியல் மேதைகளும் இவரின் பணிவுப் பாதையைப் பின்பற்றினால் எவ்வளவு நலமாயிருக்கும். புனித தோமாஸ் அக்குவீனஸ் பரிசுத்த பாப்புமாருக்கும் மறையியல் முனைவர்களுக்கும் அதே மதிப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையையும் கொடுத்தார். இதனுல் அன்றே, கருதினுல் கைத்தான் கூறுகிறுர்: ''புனித தோமையார் தனக்கு முன் சென்ற ஞானிகளின் மொழிகளைப் பொன்னைப் போன்று பேணியதாலும், மறையியல் மேதைகளுக்கு மதிப்புக் கொடுத்தபடியாலும் அவர்கள் அனைவரின் மொத்த அறிவையும் ஒருங்கே பெற்றுக்கொண்டாரென்று புகழாரம் செலுத்துகின்றுர். புனித தோமாஸ் புதுமை மோகத்தில் பழைமையை ஒதுக்கித் தள்ளவில்லை. அவரிடம் காணப்படும் இரண்டாவது உயர்ந்த பண்பு அவர் இயற்கை உலகை மதித்தார். இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் இறைவனின் சாயலைக் கண்டார். சிறப்பாக மனிதனில் பரம்பொருளின் பெருமையைக் கண்டு வியந்தார். மூன்றுவது பண்பு திருச்சபைக்குகீழ்ப் படிந்து நடந்தார். 13ம் சிங்கராயப் பாப்பரசர் கூறுகின்றுர், விண்ணக முதல்வரின் நூல்களில் திருச்சபையின் படிப்பினைகள் மணக்கின்றன என்றும் திருச்சபையின் படிப்பினைகளையே அவை எடுத்தியம்புகின்றன என்றும் கூறுவார்.

2ம் வத்திக்கான் சங்கம்கூட என்றும் பசுமையானமெய்ப்பொருளைப்படிக்கசிபார்சு செய்கிறது. சிறப்பாகப் புனித தோமாஸ் அக்குவீனுசின் தத்துவத்தைப் படிக்கத் தூண்டுகிறது. இயற்கையின் படைப்பிலே தலைசிறந்தது மனிதனுகும் என்பதைத் தனது நூலில் பல இடங்களில் வலியுறுத்துகின்றுர். எனவே மனிதனின் மாண்பையுணர்ந்து ஒவ்வொரு மனிதனுக்கும் மதிப்பளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றுர். இறை இயலுக்கு நன்கு விளக்கம் கொடுப்பது மெய்ப்பொருளாகும். எனவேதான் இறையியலின் செவிலித்தாய் மெய்ப்பொருளென அழைக்கின்றுர். ''எப்படிப் படிக்கவேண்டும்'' என்ற கட்டுரையில் புனித தோமாஸ் கூறுகிறுர். ''யார் சொல்லுகிறுர் என்பதைப் பார்ப்பதைவிட எதைச் சொல்லுகிறுர் என்பதைப் பார்க்கவேண்டும்.'' இக்கூற்று அவரின் பரந்த உள்ளத்தைக் காட்டுகிறதன்றே! அவரின் தத்துவத்தில் மற்றுமொரு சிறந்த பண்பு அது எப்பொழுதும் உண்மையைத் தேடிக்கொண்டிருக்கிறது.

அரிஸ்டோட்டல் பற்றிய விளக்க உரையில் அக்குவீனுஸ் தோமையார் கூறுகின்றுர் மக்கள் என்ன சிந்திப்பார்கள் என்ற நோக்கத்துடன் மெய்ப்பொருளைக் கற்பதைவிட எது உண்மையென்பதைக் கண்டுபிடிக்கும் நோக்குடன் தத்துவத்தைப்படிக்கவேண்டும். இல்லாததைப் பற்றிக் கூறும் தத்துவமல்ல உள்ளதைப் பற்றிக் கூறும் தத்துவம் இவரது தத்துவமாகும். கிறிஸ்துவே முழு மனிதனுக்கும் விளக்கம் கொடுப்பவர். கிறிஸ்துவே மனிதர்களின் மீட்பர் இயற்கையின் ஆண்டவர். மனிதன் உண்மையினுல் வழி நடத்தப்படவேண்டும். அந்த உண்மை கிறிஸ்துவாகும். இது அவரின் உயர்ந்த கோட்பாடாகும். புனித தோமஸ் அக்குவீனுஸ் நற்செய்திப்படி வாழ்ந்தவர். தன் வாழ்வில் அன்புக்கு முக்கிய இடம் கொடுத்தவர். அன்பிலிருந்தே எல்லாம் தோன்றுகின்றன. முடிவில் எல்லாப் பொருளும் அன்பில் சங்கமிக்கின்றன. தோற்றமும் அன்பு, முடிவும் அன்பு, என்பது அன்பு பற்றிய இவரது தத்துவமாகும். எது உண்மையறிவோ அது அன்பின் அருளால் அளிக்கப்படுகிறது. இதை அவரின் விருதுவாக்காக நாம் எடுத்துக்கொள்ளலாம். தான் செபத்திற்கு முதலிடம் கொடுக்காமல் எதையும் எழுதவில்லை. எந்த வகுப்பறைக்கும் செல்லவில்லையென்கிறுர் இப்புனிதர். ஆசிரியர் தோமாஸ் அக்குவீனுஸ் ஆழ்ந்த மனிதாபிமானம் கொண்டவர்; ஏனெனில் அவர் ஆழ்ந்த கிறிஸ்தவர். அவர் ஆழ்ந்த கிறிஸ்தவர் எனவே ஆழ்ந்த மனிதாபிமானம் கொண்டவர்.

(தழுவல்: ஒசவாட்டோர் ரோமானே, மார்கழி 17 - 1979.)

## நீத்தார் பெருமை

சிராளன் ஞானபண்டிதன் அடிகளாரின்
முதலாண்டு நினைவாஞ்சலி
7-3-1979 – 7-3-1980.

அன்பினுக்கோர் உருவம்
ஆக்கவே நினைந்து தேவன்
பண்பினுல் பெரியவனுக்கி
பரிவினுல் அனுப்பி வைத்தான்
எம்பிரான் இயேசுநாதன்
இணையடி பணிந்த ஞான
பண்டிதா என்றும் உன்னை
பாசமாய் நினைத்தோம் ஐயா!

L. S. அந்தோனிப்பிள்ளை
உபதேசியார். திருமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# பாக்கியம் பாக்கியவதியானாள்

( முகில்வாணன் )

பாட்டுக்காறி இல்லையாம் அவளொரு ஆட்டக்காறியாம். குமர்ப்பெண் இல்லையாம் பலர் தூக்கிச் செல்லும் உமல் பையாம். கோயிலுக்குச் செல்லவில்லையாம் குருக்களுடன் கும்மாளம் அடிக்கச் செல்லுகிறாளாம். சேவை செய்யப் போகவில்லையாம் ஆடவர் பூசைக்குச் செல்லுகிறாளாம்.

இறைவா இதற்குத்தானா? இந்த அவப் பெயர் எடுக்கத்தானா? எனது பருவமகள் பாக்கியத்தை உன் பாதமலருக்குப் பணி செய்ய அனுப்பினேன் என்று விம்மிப் பொருமி வேதனை தாங்காது மழமழவென நீர் வடிய மண்டியிட்டு வணங்கிக்கொண்டிருந்தான் ஆரோக்கியம். அப்போது அடுத்த அறைப்பக்கம் அவர் மனைவி அருளம்மா சத்தம் போடுவது கேட்டு தன் செப வழி பாட்டை முடித்து வெளியே வந்தான் ஆரோக்கியம். அப்போது,

''ஏண்டி பாக்கியம் உனக்கு எவ்வளவு தான் அடித்து அடித்துச் சொன்னாலும் உன் காதில அதுகள் விழுகிறது இல்லையா? எங்களுக்கு எடுத்துத் தந்திருக்கிற நல்ல பெயர் போதாது என்று இன்னமும் கெட்ட பெயர் எடுத்துத் தருவதற்காகவா இப்படி நேரம் சென்று வீட்டுக்கு வருகிறாய்'' என்று பேசிய அருளம்மாவின் வார்த்தையைத் தொடர்ந்த ஆரோக்கியம் ''இனி என்ன கெட்ட பெயர் எடுத்துத் தரப்போகிறாள், அது முழுவதையுமே எடுத்துத் தந்துவிட்டாளே'' என்றார்.

பாக்கியமோ கதறி அழுது கண்ணீர் விட்டு ஓ வென்று ஒப்பாரி வைத்து...... அப்பா... நீங்களுமா என்னை கெட்டவள் என்று சொல்லுகின்றீர்கள். அன்னை தெரேசாளின் அன்புச் சேவையைப் பார்! அவள் ஆண்டவனிடம் கொண்ட அளவற்ற உற வைப்பார்! என்ற நீங்களுமா அப்பா என்று விம்மையில்.

அவள் தாய் இடைமறித்து ''அவ கன்னியாஸ்திரி நீ கல்யாணம் முடிக்க வேண்டியவள் என்றாள்.

அம்மா எனக்கு கலியாணமே வேண்டாம். கடவுளுக்குத் தொண்டு செய்வதே போதும் என்றாள் பாக்கியம்.

அப்படியா? ஒன்றில் கன்னியாஸ்திரியாப் போ இல்லாட்டி கலியாணத்த முடி. இப்படி இரண்டில் ஒன்றையும் சேராது இடையில இருந்து மானம் போக வாழவேண்டாம் என்றாள் தாய்.

நான் இப்ப மட்டும் எப்படி அம்மா இருக்கிறேன்? கன்னியாஸ்திரியாகத்தான் இருக்கிறேன். வெள்ளை அங்கியோ கறுப்பு அங்கியோ போட்டு ஒரு சபையில் சேர்ந்தால் மட்டும் கன்னியாஸ்திரி ஆகிடமுடியாது. உள்ளத்தால் இறைவனிடம் உறவு பூண்டு அவருக்காக வாழ்வைத் துறப்பது தான் அம்மா துறவு. அதுதானம்மா என் இலக்கு என்றாள் பாக்கியம்.

அப்படி என்றால் கலியாணமும் முடிக்காதே கன்னியாஸ்திரியாகவும் போகாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே இருந்து எங்களின் மானத்தை பறக்கவிடு. என்று கூறிய அருளம்மா அடுப்பறைப் பக்கம் சென்றாள்.

ஆரோக்கியமோ தன் மகளை அணைத்து மகளே! இப்படி இருப்பது இந்த உலகத்துக்கு பொறுக்காது. உன்னை எள்ளி நகைத்து ஏளனம் செய்துகொண்டே இருக்கும். அம்மா... உன் அழகில் மயங்கி எத்தனையோ ஆடவர்கள் உன்னை மணமுடிக்கத் துடிக்கிறார்கள். பருவமும் அழகும் போன பின் இந்தப் பாக்கியம் உனக்குக் கிடைக்காது. மகளே காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும். கலியாணத்துக்குச் சம்மதி என்றார்.

கிறிஸ்துவுக்காய் தன் வாழ்வை அற்பணித்த பாக்கியமோ தந்தையின் வார்த்தைக்கு ஏதும் பேசாது சமுதாயத்தின் போக்குக்கும் தலைசாய்க்காது கட்டிலில் புரண்டு கண்ணீரில் நீந்தினாள்.

நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் மறைந்தன. நரம்பில்லா நாவினால் சிலர் சில வார்த்தைகளை இட்டுக் கட்டி முடிச்சிட்டு பொட்டிட்டுகொட்டிய வண்ணமே இருந்தனர். அவளும் தன் சேவையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். தாயும் தந்தையும் திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

ஒருநாள் படுக்கையில் வந்து விழுந்த பாக்கியம் யேசுவே சடுதி மரணத்திலும் சாவான பாவத்திலும் இருந்து என்னைச் காரும் என்றாள். ஆறு நாட்களாக இருதய வியாதிக்கு மருந்து கொடுக்கப்பட்டது. ஏழாம் நாள் அன்னை மரியையும் அவள் மகன் கிறிஸ்துவையும் கண்ணுற்றாள். இடித்துத் துவண்ட அவள் இதயம் இவர்களுடன் சங்கமித்தது. உலகமே அழுதது.

மறைக்கல்வி புகட்டிய சிறு குழந்தைகள் அம்மா என்று அலறினார்கள். அக்கா என்று அழுத தம்பிமார் தங்கைமார் எத்தனைபேர். தங்கச்சி என்று தழுதழுத்த குரலுடன்கூடிய அண்ணன்மார் அக்காமார் கன்னியாஸ்திரிகள் குருக்கள் பத்திசபையினர் எத்தனைபேர். அத்தனைபேரும்வெள்ளம்போல்ஊர்வலத்தில் செல்ல, வெண்ணிற ஆடை அணிந்தவளாய் பாக்கியம் பரலோகப்பவனி சென்றாள். அம்மா! அம்மா! அன்பான மரியே! உன் பாதம் கீழே உண்மை மலரே என்ற பாடலைக் கேட்டதும் ஊர்வலப் பவனியைப் பாத்ததும் எள்ளி நகைத்தவர் கூட்டம் இவள் அல்லவா உத்தமி! இவளைத்தானா இப்படிப் பேசினோம் என்று கண்ணீர் வடித்தபடி, பாக்கியம் என்றால் பாக்கியம்தான் என்றனர். ✿

## அன்னை தெரேசாளும் - இந்துப் பூசாரியும்

கல்கத்தாவில் ஒரு காளிகோயில் முன்னே அன்னை தெரேசாள் ஏழை இல்லம் ஒன்று அமைத்திருந்தாள். காளிகோயில் பூசாரிக்கு அன்னையின் செயல் ஆத்திரத்தை ஊட்டியது. வசைமாரி பொழிந்தார். ஒருநாள் யாரோ அன்னை தெரேசாளின் கதவை வந்து தட்டினர். ''தாயே, பூசாரி மரணப் படுக்கையில் கிடக்கின்றார். உங்களைப் பார்க்கப் பெரிதும் விரும்புகின்றார்'' என்றார் அந்த நபர். அன்னை தெரேசாள் அங்கு சென்றார். பூசாரிக்கு ஆறுதல்மொழி சொன்னார். பூசாரி அதோடு நின்றுவிடவில்லை. ''அன்னையே, உன் மடியில் கிடந்து இறக்க விரும்புகின்றேன்'' என்றார். அன்னை இந்துப் பூசாரியைத் தன் மடியில் கிடத்தினாள். மரணத்தோடு போராடிக்கொண்டிருந்த பூசாரியின் கடைசி வார்த்தை இதுதான் – ''நான் இத்தனை நாட்களாகக் காளிக்குச் செய்த பூசை வீண்போகவில்லை. நான் காளியின் மடியில்தான் இறக்கின்றேன்'' என்றாராம் அந்தப் பூசாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிலுவையும் ✝ வேதனையும்"

ஜே. எச். இரத்தினராஜா
ஏருவூர்.

பவேரியா என்னும் பெயருடைய நாட்டில் வாலிபப்பிரபு ஒருவன் இருந்தான். அவன் பலமும், பணமும், தீரமும் படைத்தவன். வயது வந்ததும் அக்னேஸ் என்னும் அழகிய பெண்ணைத் திருமணம் செய்து இல்வாழ்க்கை நடத்தி வந்தான்.

சில நாட்களுக்குப் பின் அவன் தொலைவிடத்திற்குப் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. மனைவியை வீட்டில் இருத்திவிட்டு துணைக்கு வேலைக்காரன் ஒருவனை அழைத்துக் கொண்டு சென்றான். நீண்ட தூரப் பிரயாணம் ஆகையால் ஒரு கிராமத்தை அடைந்ததும் ஓய்வெடுக்க விரும்பினான். அக்கிராமம் இயற்கையின் எழில் அழகை பிரதிபலித்துக்கொண்டிருந்தது. வசந்த காலமாகையால் இளந்தென்றல் இலேசாக வீசிக் கொண்டிருந்தது.

இளந்தென்றலின் மயக்கத்தில் ஒரு பழைய கட்டிடத்தின் தாழ்வாரத்தில் பிரபு படுத்து இளைப்பாறிக்கொண்டிருக்கையில் பழங்காலத்துக் கதவு ஒன்றில் நெடு நாட்களுக்குமுன் எழுதப்பட்ட சில வாக்கியங்களை அவன் பார்த்தான்.

''சிலுவையும் வேதனையும் எனது பங்காகும். இதுவே மனிதனது நிலை. இது நிச்சயம். உனது நிலை இதற்கு மாறுபாடாயிருக்குமானால் இந்த வாக்கியங்களை அப்படியே அழித்துவிடு'' என அதில் எழுதியிருந்தது. பிரபு தன் வேலைக்காரனை அழைத்து ''அந்த வாக்கியங்களை அழித்துவிடு, சிலுவையோ, வேதனையோ இல்லாத மனிதன் நான்'' என்றான்.

வேலைக்காரன் பயந்து நடுங்கினான். அழிக்க அவன் துணியவில்லை. தான் எப்போதும் இன்பமாக வாழப்போவதாக நினைத்த பிரபு தனக்கு இனி சிலுவையோ, வேதனையோ வரப்போவதில்லை எனக் கருதினான். அந்த வாக்கியங்களை அழிக்க வேலைக்காரன் வற்புறுத்தப்பட்டான்.

கதவில் இருந்த கடைசி வார்த்தையை வேலைக்காரன் அழித்து முடிந்ததும் முடியாமலும் இருக்கையில் ஒரு தூதன் பிரபுவிடம் ஓடிவந்து ''ஐயா இந்தச் செய்தியை உங்களிடம் கொண்டு வந்ததற்காக என்னைத் தண்டியாதீர்கள். இதை உங்களிடம் கொண்டுவர நான் உத்தரவிடப்பட்டேன்'' என்றான்.

''அது என்ன செய்தி?'' என பிரபு அச்சத்துடன் கேட்டான்.

''உங்கள் மனைவி உயிரிழந்துவிட்டார்கள். உங்கள் எதிரிகள் உங்கள் மனைவியை தனூப் நதியில் அமிழ்த்திவிட்டார்கள்'' எனத் தூதன் மொழிந்தான்.

சில நிமிடங்களாக பிரபு அசைவற்று நின்றான். மின்னல் தாக்கிய மனிதன்போல் இருந்தான். முகம் வெளுத்தது. பின்னர் வேலைக்காரனை நோக்கி, ''சிலுவையும், வேதனையும் எனது பங்காகும்'' என்று தொடங்கும் வாக்கியங்களைத் திரும்ப எழுது என்றான். ✲

## மகாத்மா காந்தி

''முதலில் உண்மையைத்தான் தேடிக் காணவேண்டும். அதன்பின் அழகும், நலமும் உங்களுக்குத் தானே கிட்டும். கிறீஸ்துநாதர் தம் மலைப் பிரசங்கத்தில் இதைத்தான் போதித்தார். இந்த உண்மையையும், இந்த அழகையும்தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன் - இவற்றிற்காகவே சாவேன்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையும் அதன் எதிர்காலமும்

— காலில் கிப்ருன்

நீனது குழந்தையை மார்போடு அணைத்தபடி இருந்த தாய் ஒருத்தி ஒருவரை வினவினுள். "குழந்தைகளைப்பற்றி சொல்ல மாட்டீர்களா?"

அவர் அளித்த பதில் பின்வருமாறு:—

உங்கள் குழந்தைகள் உங்களுக்குரியவர்கள் அல்ல. அழியாத வண்ணமே நடைபோட விரும்பும் வாழ்க்கையின் அன்புப் புத்திரர்களும் புத்திரிகளும் ஆவர். உங்கள் மூலமாக அவர்கள் வருவது உண்மைதான் எனினும் உங்களிடம் இருந்து அவர்கள் வருவதில்லை. உங்கள் அருகில் அவர்கள் அமர்ந்திருப்பதால் உங்களுக்குச் சொந்தமானவர்கள் என்று எண்ணிவிட வேண்டாம். உங்கள் அன்பை அவர்களுக்கு அளிக்கலாம். ஆனல் உங்கள் எண்ணங்களை அவர்கள் உள்ளத்தில் புகுத்திவிட முடியாது. ஏனெனில் அவர்கள் உள்ளத்தில் பல சுய எண்ணங்கள் எழும்புகின்றன. உங்களால் அவர்களின் உடலுக்கு உறைவிடம் அளிக்க முடியுமே தவிர, உள்ளத்திற்கு அளிக்க முடியாது. ஏனெனில் குழந்தைகளின் உள்ளங்கள் எதிர்காலம் என்னும் இல்லத்திலே இயங்குகின்றன. உங்களுக்கு மட்டுமல்ல. உங்கள் கனவுகளில் இருந்தும் இது மறைக்கப்பட்டுள்ளது. உங்களைப்போலவே உங்கள் குழந்தைகள் உருப்பெறவேண்டுமென நீங்கள் வற்புறுத்தலாம். ஆனல் உங்கள் மாதிரியாகவே அவர்களை வடிவெடுக்க முயற்சிக்க வேண்டாம். ஏனெனில் இந்த நிரந்தரமற்ற வாழ்வு நேற்று நிறைவுபெற்ற வாழ்வால் சிதறடிக்கப்படலாம்.

நீங்கள் ஒரு வில். அந்த வில்லிலிருந்து வாழப்போகும் அம்புகளாக உங்கள் குழந்தைகள் எய்யப்படுகின்றனர். அம்புகள் துரித வேகத்துடன் தூரத்திற்குச் செல்லும் வண்ணம் வில்லாளி ஒருவர் அவரது வல்லமையினுல் ஒரு முடிவற்ற பாதையை இலக்காகக் கொண்டு வில்லை வளைக்கிறுர்.

அந்த வில்லாளி அதே கரங்களால் வில்லாகிய உங்களை மகிழ்வுடன் வளைப்பாராக! ஏனெனில் எய்யப்படும் அம்பை அவர் எவ்வாறு நேசிக்கிருரோ அதேபோல் நிலைத்து நிற்கும் அந்த அம்பையும் அதன் நம்பகத்தையும் நேசிக்கின்ருர்.

மொழி பெயர்ப்பு:—
ச. லவேந்திர்வாசன், யே. ச.

---

மட்டுநகர் புனித சவேரியார்
இளைஞர் இயக்க

## 3வது ஆண்டு நிறைவு விழா

மட்டுநகர் புனித சவேரியார் இளைஞர் இயக்கத்தின் 3வது ஆண்டு நிறைவு விழா கடந்த 10-2-80 அன்று மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு உள்துறை விளையாட்டுக்கள், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன.

10ம் திகதி காலை 7-30 மணியளவில் இளைஞர்களுக்கான வழிபாடு இடம்பெற்றது. இவ்வழிபாட்டில் மட்டுநகர் பொலீஸ் அத்தியட்சகர் திரு. C. அம்பிகாபதி அவர்கள் "தவறும் மனமும் சமய உணர்வும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினுர். அன்று இளைஞர்களும், இளம் பெண்களுமாக 200க்கும் மேற்பட்டோர் இக்கருத்தரங்கில் பங்குபற்றினுர்கள்.

அன்று மாலை நிகழ்ச்சிகளின் பின்பு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ருேருக்குப் புளியந்தீவு பங்குத்தந்தை ஜே. அலெக்சாண்டர் அடிகளார் பரிசில்களை வழங்கினுர். புனித சவேரியார் இளைஞர் இயக்கம் ஆரம்பித்துள்ள பொன்னுண்டோ வெற்றிக் கேடயத்துக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு 'ஜெட்லைனேர்ஸ்' விளையாட்டுக் கழகம் வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ குடும்பம்

வண. பிதா. சி. தேவநேசன்,

மெதடிஸ்த சபை, மட்டக்களப்பு.

கொரிந்திய திருச்சபைக்கு புனித சின்னப்பர் எழுதிய மடலில் பின்வருமாறு கூறுகின்றுர். "நான் குழந்தையாக இருந்தபோது குழந்தையைப்போல பேசினேன் - குழந்தையைப்போல உணர்ந்தேன் — குழந்தையைப்போல சிந்தித்தேன். பெரியவனுனபோது குழந்தைக்கடுத்தவற்றை அறவே விட்டுவிட்டேன்."

நம்மில் அனேகர் பெரியவர்களாக வளர்ந்துவிட்டோம், ஆனுல் நமது நடை உடை பாவனை, நமது பேச்சு நமது செயல் யாவும் இன்றும் குழந்தை வடிவில்தான் காணப்படுகின்றது.

இன்று கிறிஸ்தவ குடும்பங்கள் சிதைந்து பிரிந்து காணப்படுவதற்கு அனேக காரணங்களுண்டு.

1. நமது ஆத்மீக வாழ்க்கை ஒருவித உணர்வையோ, உற்சாகத்தையோ, பெலத்தையோ, ஆர்வத்தையோ நமது குடும்பங்களில் ஏற்படுத்தவில்லை.

2. நமது பொது வாழ்க்கை அல்லது கூட்டு வாழ்க்கை — உள்ளொன்று புறமொன்ருக - முரண்பாடுள்ளதாக - சிதைந்ததாக — அமைந்திருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்பு Colorado என்ற அமெரிக்க பட்டணம் ஒன்றில் ஒரு 24 வயது வாலிபன் — சமூகத்தில் தனித்தவனுக - A drifter — சமுதாய விரோதியாக புரட்சிக்காரனுகத் தான் மாறினதற்குக் காரணம் தனது பெற்ருேரே என்று கூறி, அவர்கள்மீது நஷ்டம் கோரி 50,000 டொலருக்கு கோட்டில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றுன்.

3. இவ்வித வாழ்க்கை நமது பெற்ருேருடைய நாட்களுக்கும் நமது காலத்திற்கும் இடையில் பல மாற்றங்களை அடைந்துவிட்டது.

இன்று குடும்பத்தில் பெண் சுதந்திரப் பறவையாக இருக்கின்ருள் என்பதற்கு அடையாளமாக, அவரும் ஆடவனைப் போன்று, தனது இல்லத்தைவிட்டு வெளியே வேலைக்குச் செல்கின்ருள். இதற்குக் காரணம் பொருளாதாரப் பிரச்சினையேயாகும்.

ஆகவே இல்லாள் என்பவள் இல்லத்தை அரசாட்சி செய்யவேண்டியவள். ஒரு நாளில் 8 அல்லது 10 மணித்தியாலங்களில் வகுப்பறையை அரசாளுகின்ருள். அல்லது ஆபிசில் Typewriter யோ அல்லது அலுவலகங்களில் Telephone யோ அரசாட்சி செய்கின்ருள். இதனுல் இல்லத்தின் ஆட்சி வேலைக்காரனிடமோ வேலைக்காரியிடமோ மாற்றப்பட்டது.

4. கிராமங்கள் நகரங்களாக மாறிக்கொண்டு வருகின்றன. நமது நாட்டில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டெலிவிசன் சாதனம் இதற்கு மிகவும் சிறந்த எடுத்துக்காட்டு. இன்னும் ஒவ்வொரு கடற்கரையோரங்களிலும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்காகக் கட்டியெழுப்பப்படுகின்ற ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். நமது நாடும், மிகவும் சீக்கிரத்திலே ஒரு டோக்கியோவாக, ஒரு லண்டனுக, ஒரு பாரீஸ் ஆக, ஒரு நியூயோக்காக மாறவேண்டும் என்ற கோதாவிலேயோ என்னவோ கிராமங்கள் நகரங்களாக மாறுகின்றன. இதனுல் நமது சமூக, சமுதாய தொடர்புகள் நம்மிடையே அன்று இருந்த குடும்பப் பிணைப்புக்கள் - யாவும் மாற்றமடைந்து வருகின்றன. கூட்டாக இயங்கிவந்த குடும்பங்கள் இன்று தனியாக இயங்குகின்றன. முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்கவேண்டும் மறுமலர்ச்சி

உழைக்கும் கரங்கள் உயரவேண்டும் - வீணே
உண்டு கொழுக்கும் கூட்டம் மாயவேண்டும்
உழைப்பால் உயர முயல வேண்டும்
உத்தமர் வாழ்வு சிறக்க வேண்டும்

வழிகாட்டிகள் தம் வழி செல்ல வேண்டும்
வாடும் உள்ளங்கள் வளம் பல காணவேண்டும்
துளியும் சுயநலம் தொடரவேண்டாம்
தளிர்க்கும் உன் வாழ்வு தலைமுறை தலைமுறையாய்

குடியாட்சி முறையாய் இயங்க வேண்டும்
மூடு மந்திரம் முழுமையாய் மறைய வேண்டும்
தடியெடுத்து தடம்புரட்டவேண்டாம்-பிறர் சிநேகத்தை
அது உதவும் ஒரு நாள் உனக்கு.

ஆலயத்தில் அழகுச் சிலைகள் அகல வேண்டும்
அகத்தினுள் ஆண்டவன் அமர வேண்டும்
சாலமும் கோலமும் நீ போட வேண்டாம்
காலமும் நேரமும் கணித்துச் சொல்லிடும்.

தார் கொண்டு செய் நன்றியாற்றிட - என்றும்
அடியார் கூட்டம் ஆலயத்தை நிரப்ப வேண்டும்
பார்வையாளர் நிலை நீங்க வேண்டும் - அங்கே
பங்குகொள்வோர் தொகை கூடவேண்டும்.

வாழ்வுக்கு ஒரு இலக்கு வேண்டும்
வறுமைக்கு ஒரு நாள் விடிவு வேண்டும்
தாழ்விலும் தன் நம்பிக்கை உதிக்க வேண்டும்
வாழ்விலே பிறக்க வேண்டும் மறுமலர்ச்சி.

**கல்வியூரான்** எஸ். வி. ஏ.

னொரு நாள், பாட்டன், பாட்டி, மாமன், மாமி, கணவன், மனைவி, பிள்ளைகள் யாவரும் ஒரு வீட்டில் வசித்து, ஒரு அறையில் உறங்கி, ஒரு பானையில் சமைத்து கூட்டாக வாழ்ந்தனர். இன்று திருமணம் நடந்தவுடனேயே கணவனும் மனைவியுமாகப் புதுக் குடித்தனம் பண்ணி புதிய இல்லத்தை அமைக்கின்றனர்.

அன்று தமக்குள் எழுந்த பிரச்சினைகளைக் கூட்டாக அலசி ஆராய்ந்து தீர்வுகாண முயற்சித்த குடும்பங்கள் - இன்று தனியாக வாழ்ந்து - தனியாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எத்தனிக்கின்றனர்.

அன்று கருத்து வேற்றுமைகள் மத்தியிலும், கணவன் மனைவியாக ஒருவரையொருவர் தாங்கி, சகித்து, சினேகித்து, உறவு பாராட்டி ஒன்றாக வாழ்ந்த குடும்பங்கள் - இன்று ஒரு சிறு அபிப்பிராய பேதத்தினால் அல்லது சந்தேகத்தினால் நாம் பிரிந்து வாழலாம் என்று முடிவுகட்டி விடுகின்றனர். இதற்குப் பலவேளைகளில் சட்டமும், அனுமதியும் அங்கீகாரமும் வழங்குகின்றது.

அன்று பாடசாலையில் மாணவன் தனியாகவும் மாணவி தனியாகவும் வெவ்வேறு வகுப்பறைகளில் கல்வி கற்றுவந்தனர். இன்று குறிப்பாகப் பல்கலைக் கழகங்களிலும் பொதுவாக உயர்தரப் பாடசாலைகளிலும் அவர்கள் கூட்டாகக் கல்வி கற்கின்றனர். இதனால் ஆணும் பெண்ணும் மிகவும் துரிதமாக, தீவிரமாக, துணிகரமாக ஒருவரையொருவர் புரிந்துகொள்ள எத்தனிக்கின்றனர். சினேகிதம் வளருகின்றது. சில பள்ளிக்கூடத்துடன் முடிந்துவிடுகின்றது. சில சர்வகலாசாலை வரையும் சென்று அங்கு சிதைந்துவிடுகின்றது. ஆனாலும் ஒரு சிலருடைய தவிப்புக்கள், ஏக்கங்கள், துடிப்புக்கள், நட்புக்கள், உறவுகள் திருமணத்தில் முடிகின்றன. இந்த விவாகத்தில் புரட்சியுண்டு - புதுமையுண்டு. ஏனெனில் அனேகமாக இவை சாதி, சமய, இன மொழி வேற்றுமைகளைக் கடந்து இருவர் கருத்தொருமித்தவராக அமைக்கும் குடும்பங்களாகின்றன.

ஆனால் இன்று! இவ்வாறாக ஒருவரையொருவர் புரிந்தோம், அறிந்தோம்,

(18ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகல் விளக்குகளும் உலகப் பேரொளியும்

செல்வி பெட்சி, எம். ஏ.

இருளை அகற்றுவது ஒளியாகும்!
பொருளை விளக்குவது ஒளியாகும்!
மருளைத் துலக்குவது ஒளியாகும்!

அதேபோன்று உள்ளத்தின் இருளை ஓட்டுவது இயேசுக்கிறிஸ்து என்னும் பேரொளியாகும்.

பூவின் மொட்டிலே சூரிய ஒளி பட்டம்து
அது பட்டென்று விரிகிறதல்லவா?
செங்கதிரவனின் சிவந்த கரங்கள் பட்டதும்
செந்தாமரை சிரிக்கின்றதல்லவா?
நிலாவின் ஒளியைக் கண்டதும் அல்லி மலர்
கள் பூக்கின்றதல்லவா?

காலமெல்லாம் காத்திருக்கும் குறிஞ்சி மலராக நள்ளிரவிலே பூக்கும் குண்டுமணியாகக் கிறிஸ்து நள்ளிரவிலே பிறந்தார். நாம் அனைவரும் பாவ இருளில் படுத்திருக்கும்போது நம் அனைவரையும் தட்டி எழுப்பும் உதய சூரியனாக வந்தார். இதை ஒரு கவிஞன் ''நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலாவே காடுகமழும் கற்பூரச் சொக்கோ'' எனப் பாடிவைத்துச் சென்றுள்ளான்.

## அகல் விளக்குகளும், உலகப் பேரொளியும் :-

நம் அன்றாட வாழ்விலே பல ஒளி விளக்குகளைக் காண்கிறோம். அகல் விளக்குகள் வீட்டிற்கு ஒளி கொடுக்கின்றன. விண்மீன்களும், சந்திரனும், சூரியனும் வானத்திலே இருந்துகொண்டு உலகுக்கு ஒளி கொடுக்கின்றன.

நம்முடைய ஆத்மீக உலகிலும் பல ஒளிவிளக்குகளைக் காண்கின்றோம். அருளப்பரைப்போன்ற அகல் விளக்குகள் அக இருளை நீக்கும் ஒளித்தீபங்கள் - ஒளிக்கீற்றுக்கள். இவர்களால் நீடித்த ஒளியையும், அழியா இன்பத்தையும் தரமுடியாது. அவர்கள் தரும் ஒளியில் சொற்ப நேரந்தான் நம்மால் இளைப்பாறமுடியும். பல விண் மீன்களும், அகல் விளக்குகளும் இருந்தாலும் ஒரு சூரியனே உலகில் உண்டு. அதேபோன்று பல ஞானிகளும், மேதைகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும், சமயத்தவர்களும் உலகில் தோன்றி இருந்தாலும் எல்லோருக்கும் ஒளி கொடுக்கும் ஒரு சூரியன் உண்டு. அவ்வொளி கிறிஸ்து என்னும் பேரொளியாகும். இவராலே நீடித்த ஒளியைத் தரமுடியும் என்பதை இயேசுவே இவ்வாறு சொன்னார்: ''அருளப்பர் எரிந்து சுடர்விடும் விளக்கு; அவருடைய ஒளியில் நீங்கள் சற்று நேரமே களிப்புற விரும்பினீர்கள்'' (அரு. 6 : 35).

அருளப்பர், புத்தர், காந்தி, முகமது, லாஉட்சே போன்ற அருள்நெறி ஆளர்கள், அறநெறிச் செல்வர்கள் பேரொளியாகிய கிறிஸ்துவுக்குச் சாட்சியம் அளிக்க வந்தவர்களே. கிறிஸ்து தன்னைப்பற்றி ஆணித்தரமாக, அழுத்தம், திருத்தமாக இவ்வாறு கூறுவார்: ''நானே உலகின் ஒளி; என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான்; உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (அரு. 8:12).

கிறிஸ்து உலகிற்கு ஒளியாக, உலகுக்கு உணவாக, உலகுக்கு மருந்தாக வந்தார் என புனித பேனுட் கூறுவார்.

இத்தவக்காலத்தில் இருளில் வாழ்ந்திருக்கும் நாம் ஒளியாகிய கிறிஸ்துவை நம் வாழ்வில் ஏற்று - ஒளியின் மக்களாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சின்னப்பரோடு

இரா. இருதயமலர்.

நான் அல்ல வாழ்வது என்னில் கிறிஸ்த்து வாழ்கின்றார் என்று, புனித சின்னப்பர் தனது திருமுகத்தில் எடுத்துரைக்கின்றார் என்றால், புனித சின்னப்பர் தன் வாழ்வின் மையமாக கிறிஸ்த்துவையே வைத்து கிறிஸ்த்துவில் கிறிஸ்த்துவால் கிறிஸ்த்துவோடு ஒன்றிணைக்கப்பட்டு வாழ்ந்தார். அதனால்தான் கிறிஸ்த்துவின் நிமிர்த்தம் நான் ஒரு பயித்தியகாரன் ஆனேன் என்று பகர்கின்றார்.

புனித சின்னப்பருடைய வாழ்க்கை பயணத்திலே குறுக்கிட்ட இன்னல்கள், இக்கட்டுக்கள், இடைஞ்சல்கள் அத்தனையும் சுக்கு நூறாக தூக்கி எறியப்பட்டதென்றால் அவருடைய வாழ்க்கை என்னும் போராட்டத்திலே கிறிஸ்த்து மையப் பொருளாக இருந்ததுதான் காரணம்.

ஊன் உடலுக்கு ஏற்புடைத்தான வாழ்க்கையை வெறுத்து, மறுத்து ஆவிக்கு ஏற்புடைத்தான வாழ்வு வாழ்ந்தார், அதனால் தான் என் போராட்டத்தை முடித்தேன். வெற்றியின் கிரீடம் எனக்காக காத்திருக்கிறது. என்று மகிழ்ச்சி பரணீ பாடினார். சங்கீதம், 4/17ல் தானியமும், திராட்சையும், நன்கு விளையும் காலத்தில் மக்கள் அடையும் மகிழ்ச்சியைவிட மேலான மகிழ்ச்சியை என் உள்ளத்தில் பொங்கச் செய்தீர். என்பதற்கு ஒப்ப உலகம் கொடுக்க முடியாத பேரமைதியைக் கொடுத்த கிறிஸ்த்து என்னும் இன்பக் கடலிலே நீந்தி விளையாடும் என்னை எடுத்து எறிபவர் யார்? அவருக்கும், எனக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும், அன்பு, உறவு, முறையை பிரித்து எடுப்பவன் யார்? அவர் திராட்சை மரம் நான் அதன் கிளை எங்கள் இருவருக்கும் இடையிலே வெடிப்பு இல்லை எங்களை உடைப்பவன் யார்? என்பது போன்று கிறிஸ்த்துவில் இறுக்கப்பட்டு முழக்கமிடும் சின்னப்பரைப் பார்த்து நாமும் நம் அன்றாட வாழ்வில் கிறிஸ்த்துவில் சங்கமித்த வாழ்வு வாழ்தல் வேண்டும்.

எப்படியெனில்,

நாம் உண்ணயில், உடுக்கையில், உறிஞ்சி நீர் குடிக்கையில், படுக்கையில், எழுந்திருக்கையில், நடக்கையில், தொழில் புரிகையில், நான் அல்ல வாழ்வது என்னில் கிறிஸ்த்து வாழ்கின்றார் என்ற தாரக மந்திரத்தை தலைமேல் சுமந்தவர்களாய், நம் வாழ்க்கை பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் சிறந்த வழிகாட்டியாகிய கிறிஸ்த்துவின் கரத்தைப் பற்றி, ஆண்டவரே வாரும் என்னை அழைத்துச் செல்லும், என் அனுதின வேலைகளில் என் உடன் இருந்து ஒத்துழையும். என்று நம் வாழ்க்கை சுமைகளை அவரிடம் கொடுத்து நம்மையும் நாம் வாழும் சமூகத்தையும், உலகத்தையும் யேசு மையமாக்குவோம்.

---

# கிறிஸ்தவ குடும்பங்...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்தோம், ஊடுருவினோம் என்ற நிச்சயத்துடன், காதலித்துத் திருமணம் செய்த அனேக குடும்பங்கள் சிதைவுபட்டுவிடுகின்றன. விவாகரத்துக் கோரிக் கோட்டுக்குச் செல்கின்றன. அன்று இது மேலைத் தேசத்தில் மாத்திரம் காணப்பட்ட ஒரு பரிதாபக் காட்சி. இன்று இது நம்நாட்டிலும் மோசமாகத் தலைதூக்கிவிட்டது.

இல்லம் அல்லது குடும்பம் என்று நாம் கூறும்போது இதில் கணவன், மனைவி, பிள்ளைகள் யாவரும் முக்கிய இடத்தை எடுக்கின்றனர். இது கிறீஸ்தவ குடும்பத்தில் காணப்படவேண்டிய ஒரு முக்கிய அம்சமாகும். பொதுவாக ஒரு குடும்பத்தில் முக்கிய இடத்தை வகுக்கும் பொறுப்பு பெண்ணையே சாரும் என்று அனேகர் கருதுகின்றனர். ''ஒரு இல்லத்தையோ அல்லது ஒரு குடும்பத்தையோ கோவிலாக்கும் தகைமை பெண்ணைச் சார்ந்ததே'' என்று ஒரு அறிஞர் கூறுகின்றார். ஆகவே கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலே, குறிப்பாகப் பெண் என்ன இடத்தை வகுக்கின்றாள் என்பதை நாம் தொடர்ந்து ஆராய்வோம்.

நான் வருகின்ற மலரில் கிறிஸ்தவ குடும்பத்துக்கூடாக உங்களுடன் தொடர்பு கொள்வேன். அதுவரையில் உங்களைச் சிந்திக்க வைப்பதற்கு ஒரு சாதாரண பாடல் - ஆனால் பொருள் உண்டு.

கடவுள் மனிதனாகப் பிறக்கவேண்டும்
அவன் காதலித்து வேதனையில்
வாடவேண்டும்
பிரிவு என்னும் கடலினிலே
மூழ்கவேண்டும்
அவன் பெண்ணென்றால் என்னென்று
உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியாரின் அறிவுரை

புனித அந்தோனியார் பிரான்சிஸ் சபையில் சேர்ந்ததற்கு ஒரு காரணம் ''மொரோக்கோ'' சென்ற மகமதியர்களுக்கு மெய்யான மதத்தைப் போதித்து அவர்களை யேசுவின் பாதம் சேர்க்க வேண்டும் என்ற ஆவல்.

பிரான்சிஸ் சபையில் நவ சந்நியாசம் முடிந்து வார்த்தைப்பாடு கொடுத்தவுடனே ''மொரோக்கோ'' போக அயத்தஞ் செய்தார். அங்கே மௌனத்திலும் படிப்பிலும் ஜெபத்திலும் காலத்தைச் செலவழித்தார்.

இந் நாட்களில் ''சான்சியா'' என்னும் அரசி ஒரு பணிப் பெண்ணோடு மடத்திற்கு வந்து அந்தோனியாரைப் பார்க்க ஆசித்தாள். அதற்கு அந்தோனியார் ''எதற்காக அவள் என்னைப் பார்க்கவேண்டும், அவளை எனக்குத் தெரியாதே'' என்றார். எங்கே அரசியைப் பார்க்க மறுத்துவிடுவாரோ என்று ஏனைய சந்நியாசிகள் ஏங்கி நிற்பதை கண்ணுற்ற புனிதர் அரசியைச் சந்திக்கச் சம்மதித்தார்.

தாமதமாவதைக் கண்ணுற்ற சான்சியா அரசி, தன்னை அந்தோனியார் பார்க்க மறுத்து விட்டதாக எண்ணி கண்ணீர் சிந்தி அழுது கொண்டிருக்கும்போது புனித அந்தோனியார் அங்கே வந்தார். அவளுக்குச் சந்தோஷம். ஆனால் இது என்ன கோலம், ஒரு கையில் ஒரு சிறு வைக்கோல் கத்தை, மற்றக் கையில் ஒரு கொள்ளிக் கட்டை. இதைக் கண்ட அரசிக்கு ஒரு மலைப்பு புனிதர் வைக்கோல் கத்தையைக் கொள்ளியால் தொட்டார். அது உடனே பற்றி எரிந்தது. பின் வெகு மரியாதையாக புனிதர் சொன்னார் ''எவ்விதம் தீயானது வைக்கோலை அழித்தது என்று கண்டீர்கள். அது போலவே வாசல் அறையில் அனுவசியமான நீண்ட நேரம் சல்லாபிக்கும் துறவிகளின் கதியும் ஆகும். அவர்கள் நரகத்திற்குத் தயார் செய்கிறார்கள். வேறு நஷ்டம் ஒன்றும் இல்லாவிட்டாலும், லாபத்தில் அடைந்த தன்வசம், உள்ளடக்கம் என்ற ஜெபத்தை யாவது அத்தகைய சம்பாஷணையினால் மேற் சொன்ன துறவிகள் இழந்து போகிறார்கள்''

பெரும் தொழில் ஒன்றுக்கு ஆயத்த மாய் நான் தியானத்தில் இருக்கிறேன் அந்த அலுவல்களுக்கு ஆயத்தம் பெண்களோடு கண்டநேரம் பேச்சில் ஈடுபடுவதில்லை அல்ல என்றார்.

அந்தோனியார் சொன்னதை அரசி கண்டு பிடித்தாள். இந்த சொற்ப வார்த்தைகளை புனிதரைப் பார்த்ததால் தனக்கு வந்த பெரும் இலாபம் எனக் கண்டார், அவரது தனி வாசத்திற்குத் தான் இடைஞ்சலாக வந்ததை மன்னிக்கக் கேட்டுக் கொண்டு அரண்மனை திரும்பினார். அந்த ஆச்சிரமத்தின் பெயர் ''ஒலிவராஸ்'' என்பதாம்.

"Life of St. Antony of papua"
என்னும் புத்தகத்தில் ஒருபகுதி.

## அறிவித்தல்

சென்ற திங்கள் தொண்டனில் நாங்கள் அறிவித்தபடி கேள்வி பதில் என்னும் பகுதி இத் திங்கள் இதழில் இடம் பெறவில்லையே என்று ஏங்கும் சுவைஞருக்கு **ஒரு வார்த்தை** தொண்டனிடம் இதுவரை எவரும் எந்த கேள்வியும் கேட்கவில்லை அதனால் பதிலும் இல்லை. அடுத்த இதழுக்குமுன் எவரும் கேள்விகள் கேட்டு எழுதினால் பதிலிறுக்கத் தொண்டன் காத்திருக் கின்றான்.

கேள்வி அனுப்பும் முகவுரை:

கேள்வி பதில்,
தொண்டன்
புனித வளனார் சிறிய குருமடம்,
உப்புவெளி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி

## திருகோணமலை

❋ மூதூர்

புனித செபஸ்தியார் திருநாள் மூதூர் பங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்திரு லீயோ அடிகள் திருப்பலி நிறைவேற்றினர்.

❋ திருமலை

செபஸ்தியார்புரத்தில் புனித செபஸ்தியார் திருநாள் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. கவிஞர் முகில்வாணன் தன் சிறப்பான விவிலிய வழிபாட்டினல் எல்லோரையும் பரவசமடையச் செய்தார். திருமலை — மட்டுநகர் ஆயர் கூட்டுப்பலிப் பூசை வைத்து விழாவை இனிதே முடித்தார்.

❋ சின்னக்கடை

உப்புவெளி புனித இஞ்ஞாசியார் கன்னியர் மடம் முதன் முதலாக தன் அருட்செல்வி ஸ்ரனிஸ்லாஸ் சில்வாவின் நித்திய வார்த்தைப்பாட்டைக் கண்டுகளித்தது. சின்னக்கடை குவாடலூப் அன்னை ஆலயத்தில் நித்திய வார்த்தைப்பாடு சடங்கு நிகழ்ந்தது. சம்மனசு கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்செல்விகள் பலர் கொழும்பு, சிலாபம், காலி ஆகிய மறைமாவட்டங்களிலிருந்து வந்திருந்தனர்.

❋ திருமலை

கிறிஸ்தவ இளைஞர்களும், திருமலையின் சிறந்த எழுத்தாளர்களும் இணைந்து வெளியிடப்போகும் மாத இதழே - சமுதாயம் - சமுதாய முன்னேற்றக் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

❋ உப்புவெளி

புனித வளனர் சிறிய குருமடத்தில் குருமாணவர்களின் தொகை 20 ஆக உயர்ந்துள்ளது.

❋ திருமலை

திருமலை "பரலோக இராக்கினி மாதா" பிரசீடியத்தின் புதிய தெரிவு. தலைவர்: ருகல், உபதலைவர்: அந்தோனிராஜ், செயளர்: ரா. ஹெக்டர் பெர்ணண்டோ, பொருளர்: கே. எம். வி. அம்புறோஸ், மற்றும் அறுவர் குழுவும், போஷகராக வண. டிக்கோணி அடிகளாரும் தெரிவானுர்.

## மட்டக்களப்பு

❋ இருதயபுரம்

இருதயபுரப் பங்கில் அருட்திரு றேமன் அரசரெத்தினம் தலைமையில் செடக் ஸ்தாபனத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு ஓலைக்குடிசையாக இருந்த 300 வீடுகள் கல் வீடுகளாக மாற்றம் அடைந்துள்ளது. இன்னும் 21 வீடுகள் அரையும் குறையுமாக பூர்த்தியாகிக்கொண்டிருக்கிறது

குருவெளியில் சேதமுற்ற திருஇருதய ஆண்டவர் ஆலயம் இப்பங்கில் புதிய எழிலோடு காட்சிதர இருக்கிறது என்று அருட்திரு றேமன் அடிகளார் கூறினர். மார்ச் 19ல் 4½ இலட்சம் ரூபா செலவில் இத்தேவாலயத்துக்கு அடிக்கல் நாட்டப்படும் என்றும் அத்தேவாலயத்தை கட்ட அருகில் உள்ள பல காணிகளை 30 ஆயிரம் ரூபா கொடுத்து பெற்றுள்ளார்கள் என்றும் அறியத்தந்தார்.

**இரண்டு பழங்கள்**

ரியேஸி என்னும் சிற்றூரில் அர்ச். பத்திநாதர் சிறுவனுயிருக்கையில் ஞாயிறுதோறும் பங்கு சுவாமியார் கற்பித்த ஞானோபதேசப் பாடத்திற்குச் செல்வார். பாடநேரத்தில் ஒரு நாள் பங்குக் குரு "கடவுள் இருக்கிற இடத்தைச் சொல்கிறவர்களுக்கு ஒரு பழம் தருகிறேன்" என்றார். சில வினாடிகளுக்குப்பின் அர்ச்சியசிஷ்டர் எழுந்து, "கடவுள் இல்லாத இடத்தைச் சொல்லுகிறவர்களுக்கு இரண்டு பழங்கள் நான் தருகிறேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டனுக்குப் புகழாரம்!



—(❋)—

காணிக்கை அன்னை ஆலயம்,
மட்டக்களப்பு.

தொண்டன் ஆசிரியர் அவர்கட்கு!

''தொண்டன்'' பத்திரிகையை நூல் வடிவில் கொண்டுவந்து இன்னும் அதன் தரத்தை மீண்டும் பழைய புகழின் உச்சாணிக்குக் கொண்டுவந்துள்ளீர்கள். அதற்கு என் பாராட்டுக்கள். ஆம், 'தொண்டன்' மிகவும் கவர்ச்சியாய் இருக்கின்றது. நன்றி.

கிறிஸ்துவில் அன்புள்ள
அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

—❋—

சின்னமலை,
சென்னை - 15.

தொண்டன் ஆசிரியர் அவர்கட்கு,

அழகரசனின் அருளோவியம் மிக அருமையாக அமைந்திருந்தது. ஜனவரி - பெப்ரவரி ''தொண்டனை''ப் படித்தேன், சுவைத்தேன். முகில்வாணனின் பொங்கல் கட்டுரையும் சிறப்பாக இருந்தது.

B. இக்னேசியஸ் சாமுவேல், M. A.

—❋—

18/1, எல்லை வீதி வடக்கு,
மட்டக்களப்பு.

தொண்டன் ஆசிரியர் அவர்கட்கு,

மீண்டும் உங்கள் கைவண்ணத்தில் புதிய மெருகுடனும், புதுப் பொலிவுடனும் சஞ்சிகையாகத் ''தொண்டன்'' வெளிவருகிறது கண்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும், அவ்விதழிலே தங்களின் கைவண்ணத்தில் எழுதிய ''குடும்ப நலம் காப்போம்'' என்ற கட்டுரை, இதழுக்கு மென் மேலும் மெருகூட்டுகின்றது. அத்தோடு, எல்லாக் கட்டுரைகளும் மிகச் சிறப்பாக அமைந்தன. அடுத்த இதழில் பல புதுப் புது அம்சங்கள் சேர்க்கப்படுமென எண்ணுகிறேன். அதோடு, ''தொண்டன்'' மென் மேலும் வளர்ந்து இனிமேலாவது மாதம் ஒருமுறை வருமென எதிர்பார்க்கின்றேன். தயவுசெய்து ஆவன செய்யவும். நன்றி.

ஆ. பயஸ் சசிதரன்.

—❋—

புனித வளன் வீதி,
பாலையூற்று,
திருமலை.

தொண்டன் ஆசிரியர் அவர்கட்கு,

தாங்கள் வெயியிட்ட தைத்திங்கள் ''தொண்டன்'' இதழ் கண்ணுற்றேன். புத்தாண்டில் புத்தக உருவில், புது மெருகுடன் வெளியான இவ்விதழின் தரம் சிறப்புற உயர்வது கண்டு மகிழும் அதே வேளையில், மேலும் தொண்டனின் பணி சிறந்து வளர்ந்தோங்க எனது வாழ்த்துக்களை உங்கள் திருமுன்னர் படைக்கின்றேன்.


ஞா. அல்பேட்.

## அறிவித்தல்

சந்தாதாரர்களே! உங்கள் சந்தாப் பணத்தைத் தாமதம் செய்யாது கூடிய விரைவில் கொடுத்துதவி தொண்டனை வளர்க்கும்படி வேண்டுகின்றோம். புதிய சந்தாதாரர்களைத் தொண்டனுக்குச் சேர்த்துக்கொடுக்கும்படியும் தயவாய் வேண்டப்படுகின்றீர்கள். —ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Registered as a Newspaper in Sri Lanka)



# அறிவித்தல்

தொண்டன் விளம்பரதாரர்களுக்கென தன் பக்கத்தில் ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளான். மரண ஆண்டறிவித்தலோ, வியாபார விளம்பரங்களோ, புத்தக பத்திரிகை விளம்பரங்களோ இன்னும் நீங்கள் விரும்பும் விளம்பரங்களை வெளியிடுவான்.

கட்டணம் அழகூட்டப்பட்ட பின்பக்க அட்டை முழுப் பக்கமும் 300/– ரூபா. அரைப்பக்கம் 150/– ரூபா. கால் பக்கம் 75/- ரூபா. உள்பக்கம் ஒன்றுக்கு முழுவதும் 200/– ரூபா. அரைப்பக்கம் 100/– ரூபா. கால்பக்கம் 50/– ரூபா.

விரும்பும் விளம்பரதாரர்கள்:

**தொண்டன்,**
புனித வளனூர் சிறுவர் குருமடம்,
உப்புவெளி,
திருக்கோணமலை.

என்ற விலாசத்துக்குத் தொடர்புகொள்ளவும்.

## அடுத்து எதிர்பாருங்கள்!

- **வித்துவான் சா. இ. கமலநாதன் எழுதும்**
  குழந்தையின் வளர்ச்சியில் உணர்ச்சிப் பின்னணி.
- **அருட்திரு அந்தனிஜான் அழகரசன் M. A. Ph. D. எழுதும்**
  பெற்றோர்களால் நிட்சயிக்கப்பட்ட திருமணம்.
- **வித்துவான் F. X. நடராசா எழுதும்**
  கிறிஸ்தவ புலவர்கள் வரலாறு.
- நான் வழிபடும் கடவுள் — கிறிஸ்து.

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org